# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 92 /2021

**வழக்கு சாட்சி :PW4(LW4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செண்பகவள்ளி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சின்னசாமி | தொழில் | : | கூலிவேலை |
| கிராமம் | : | சொரியம்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 47 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 08th day of July 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சொரியம்பட்டியில் குடியிருந்து வந்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். ஆஜர் எதிரி யார் என்று எனக்கு தெரியாது. கடந்த 26.08.2020 அன்று இரவு 09.30 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பி கொண்டிருந்த போது டாடா ஏசி வாகனத்தில் நானும், என்னுடன் 15 நபர்களும் பயணித்து வந்தோம். திடீரென சத்தம் கேட்ட போது வண்டியில் இருந்த புவனேஷ்வரி என்கிற பெண் வண்டிக்குள் விழுந்துவிட்டார். அந்த பெண் மயக்கம் அடைந்ததால் நாங்கள் சத்தம் போட்டோம். வாகனத்தின் ஓட்டுநார் செல்வராஜ் வாகனத்தை மருத்துவமனைக்கு திருப்பினார் . புவணேஷ்வரியை பரம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றோம் . புவனேஷ்வரியின் தாயாருக்கு தகவல் தெரிவித்தோம். அவர் மருத்துவமனைக்கு வந்தார். புவனேஷ்வரியை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பிறகு மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக தகவல் கூறினார்கள். புவனேஷ்வரி சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

கடந்த 26.08.2020 அன்று ஆஜர் எதிரி TN 55 BT 7519 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா பொலிரோ பிக்கப் வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்த போது வாகனத்தில் பயணித்த புவனேஷ்வரியின் தலையில் மரக்கிளை மோதியதில் புவனேஷவரிக்கு தலையில் காயம் ஏற்பட்டு அவர்

இறந்துவிட்டார் எனவும், ஆஜர் எதிரியின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது எனவும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எ.த.கு.வி</u>**

இல்லை.